<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>
ஆர்சிஓபி எண். 12/2014

இன்று 2025 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 26 ம் நாள் இன்று இந்த எ.ம.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சந்தோஷ் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சுப்பிரமணியம் | கிராமம் | : அமர்ஜோதி கார்டன் |
| வயது | : 45 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 26-08-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**<u>சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) இந்த மனுவில் எதிர்வாதம் செய்தது யார் என்றால் 1ம் எதிர்மனுதாரர் ஆவார். கடந்த 17.09.2001ம் தேதி மனுதாரருடன் வாடகை ஒப்பந்தம் செய்தது உண்மை என்றால் சரிதான். இந்த ஒப்பந்தம் 30 ஆண்டுகளுக்கு போடப்பட்டது என்றால் சரிதான். அந்த ஒப்பந்தம் நாளது வரை ரத்து செய்யப்படவில்லை என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தில் கண்டுள்ள ஷரத்துக்கள் சரியானது என்றால் சரிதான். முதல் விசாரணை வாக்குமூலத்தில் பத்தில் 3ல் சுகேசன் நிதிநிறுவனத்தில் ரூபாய் 5 லட்சம் கடன் பெற்றதால் சொத்து மற்ற கடன்தாரர்களிடம் சிக்கிவிடக் கூடாது என்ற எண்ணத்தில் வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்ற விவரத்தை முதன்முறையாக எனது பிரமாண வாக்குமூலத்தில் தான் சொல்கிறேன் என்றால் சரிதான்.

2) ஆர்சிஓபி 6/2014ன் மனுவிலும் இந்த மனுவின் எதிர் உரையிலோ மேற்சொன்ன விவரங்களை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். கடனுக்காக தான் ஒப்பந்தம் போடப்பட்டதாக சொல்வது தவறானது என்றால் சரியல்ல. அவர்களுக்குள் பேசிக் கொண்டார்கள். அவ்வாறு பேசிக் கொண்ட விவரம் ஒப்பந்தத்தில் உள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு எந்த பேச்சு வார்த்தையும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இந்த வாடகை ஒப்பந்தத்தின்படி 2001 முதல் 2012ம் ஆண்டு ஜனவரி மாதம் வரை மனுதாரர் வாடகை செலுத்தி வந்தார் என்றால் சரிதான்.

3) நாளது தேதி வரை மனுதாரர் வாடகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்து வருகிறார் என்றால் மனு தாக்கல் செய்த 2014ம் ஆண்டு முதல் வைப்பீடு செய்து வருகிறார். என் பெரியப்பா, சித்தப்பா ஆகியோர் இறந்த பிறகு அ.வ.எண்.722/2008 தாக்கல் செய்து அந்த வழக்கில் மனுச் சொத்து மற்றும் அதனை ஒட்டி உள்ள இதர சொத்துக்கள் பொறுத்து சமரசம் தீர்ப்பாணை ஏற்பட்டதாக சொல்லி உள்ள நிலையில் மனுச் சொத்து யாராருக்கு ஒதுக்கப்பட்டது என்ற விவரத்தை மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதா என்றால் என் அப்பா சொல்லி இருப்பார்.

4) என் அப்பா வாய்மொழியாகவோ, எழுத்துமூலமாகவோ எந்த விவரமும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. கடந்த 11.05.2014ம் தேதி தான் மனுதாரருக்கு எ.ம.சா.ஆ.2 அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். மனுதாரர் அந்த அறிவிப்புக்கு எ.ம.சா.ஆ.3 பதில் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.3ல் மார்ச் 2014 வரை வாடகை செலுத்தியதாக சொல்லி உள்ளார் என்றால் சரிதான். ஆனால் வாடகை செலுத்தப்படவில்லை. அந்த அறிவிப்பை என் அப்பாவிற்கு அனுப்பி அதில் ஏப்ரல் மற்றும் மே 2014 க்கு வாடகையை பெற்றுக் கொள்ள கோரி அறிவிப்பு நகல் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அதை ஏற்கவில்லை. ஏனென்றால் வாடகை பாக்கி 27 மாதங்களுக்கு இருப்பதால் ஏற்கவில்லை.

5) மனுதாரர் ஏப்ரல் 2014 முதல் ஜுலை 2014 ஆகிய மாதங்களுக்கு ரூ.10,000/- வாடகையாக வரைவு காசோலை எடுத்து என் அப்பாவிற்கு அனுப்பினார் என்றால் சரிதான். ஆனால் அதையும் ஏற்கவில்லை. ஏனென்றால் வாடகை பாக்கி 27 மாதங்களுக்கு இருப்பதால் ஏற்கவில்லை. எ.ம.சா.ஆ.7 மற்றும் 8ன்படி வேண்டுமென்றே வரைவு காசோலையை பெறவில்லை என்று மீண்டும் மனுதாரர் வரைவு காசோலை அனுப்பினார் என்றால் சரிதான். ஆனால் அதையும் ஏற்கவில்லை. ஏனென்றால் வாடகை பாக்கி 27 மாதங்களுக்கு இருப்பதால் ஏற்கவில்லை.

6) கடந்த 31.07.2014ம் தேதி என் அப்பா கொடுத்த பதில் அறிவிப்பில் ஆர்சிஓபி 6/2014 மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என கூறி ரூ.10,000/-க்கான வரைவு

காசோலையை திருப்பி அனுப்பினோம் என்றால் சரிதான். மனுதாரர் அனுப்பிய அறிவிப்பில் வாடகை தொகையை செலுத்த வங்கி விவரங்கள் கேட்டு இருந்தார் அதையும் அனுப்பவில்லை என்றால் சரிதான். வாடகை செலுத்தினால் அதற்கு ரசீது கொடுக்கும் பழக்கம் இல்லை என்றால் சரிதான். ஆனால் அவர் வவுச்சரில் கையொப்பம் பெற்றுக் கொள்கிறார்.

7) முதல் விசாரணை வாக்குமூலம் பத்தி 5 முதல் 8ல் சொல்லி உள்ள விவரங்கள் எதையும் எனது எதிர் உரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிர் உரையில் சொல்லப்படாத விவரங்கள் முதல் விசாரணையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுதாரருக்கு எந்த வாடகை பாக்கியும் இல்லை ஆனால் மனுவிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கை ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மனுப்படி தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2025.08.26 16:19:26 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.